மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர்க் குழு அறிக்கை அளித்ததற்குப் பிறகு அதை நிதித் துறை ஆராய்ந்து அதன் மீது முடிவு எடுக்கப்படும். நிதித் துறை எப்போது முடிவு வெளியிடுகிறதோ அப்போது அறிவிக்கப்படும்.

5. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

'மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS